**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07032026

# Goddess Worship and Feminist Thoughts in the Poems of Mahakavi Bharathiar: An Analysis

**M. Jennifer Amalda*,**
Assistant Professor, Department of Tamil, RVS Technical Campus, Coimbatore – 641402,

*Correspondence: amaldatheresa@gmail.com,

**Article Info**
Received on 24-Feb-2026, Revised on 25-Feb-2026, Accepted on 27-Feb-2026, Published on 01-Mar-2026

## ABSTRACT

*Mahakavi Subramania Bharathiar was not only the pioneer of the 20th-century Tamil literary renaissance but also a profound social reformer and feminist thinker. This article provides a detailed analysis of the methods of Goddess worship featured in Bharathiar's poems and the underlying feminist and social perspectives. Specifically, the songs composed during Bharathiar's period of residence in Kadayam (1918-1920) regarding Goddesses Bhadrakali, Kalyani, and Muthumari are taken as the primary subjects of study.*

*Bharathi perceived woman as the manifestation of the Divine (Shakti); his proclamation, "Shakti is everywhere you look," reveals his unique vision of viewing universal energy as feminine power. This article explains, based on data, how Bharathi's worship of female deities was not merely ritualistic but served as a tool for the abolition of caste and the liberation of women. Furthermore, it elaborates on the philosophical connections between his concept of the 'Modern Woman' (Pudhumai Penn) and the worship of Adi Shakti, as well as the spiritual transformation he underwent following his meeting with Sister Nivedita.*

***KEYWORDS:*** *Mahakavi Bharathiar, Goddesses, Parasakti, Kadayam, Feminism, Modern Woman (Pudhumai Penn), Bhadrakali, Muthumari, Kalyani Amman, Shaktism, Social Reform, Women's Liberation.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

Tamilmanam

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

# மகாகவி பாரதியார் கவிதைகளில் பெண் தெய்வ வழிபாடும் பெண்ணியச் சிந்தனைகளும்: ஓர் ஆய்வு

***மா. ஜெனிபர் அமல்டா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஆர்.வி.எஸ். தொழில்நுட்ப வளாகம், கோயம்புத்தூர் – 641402,

**ஆய்வுச் சுருக்கம்**

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் மட்டுமல்லாமல், சமூகச் சீர்திருத்தவாதியாகவும், பெண்ணியச் சிந்தனையாளராகவும் திகழ்ந்தவர். இக்கட்டுரை, பாரதியாரின் கவிதைகளில் இடம்பெற்றுள்ள பெண் தெய்வ வழிபாட்டு முறைகளையும், அதன் பின்னணியில் அமைந்துள்ள பெண்ணிய மற்றும் சமுதாயச் சிந்தனைகளையும் விரிவாக ஆராய்கிறது. குறிப்பாக, பாரதியார் கடையத்தில் வாழ்ந்த காலத்தில் (1918-1920) இயற்றிய பத்திரகாளியம்மன், கல்யாணி அம்மன் மற்றும் முத்துமாரியம்மன் குறித்த பாடல்கள் ஆய்வுப்பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளன. பாரதி பெண்ணைத் தெய்வத்தின் வடிவமாக (சக்தி) கண்டவர்; "எங்கெங்கு காணினும் சக்தியடா" என்ற அவருடைய கூற்று, உலகளாவிய ஆற்றலைப் பெண்ணிய ஆற்றலாகப் பார்க்கும் அவருடைய தனித்துவமான தரிசனத்தை வெளிப்படுத்துகிறது. இக்கட்டுரை, பாரதியின் பெண் தெய்வ வழிபாடு எவ்வாறு வெறும் சடங்கு சார்ந்த ஒன்றாக இல்லாமல், சாதிய ஒழிப்பு மற்றும் பெண் விடுதலைக்கான ஒரு கருவியாகச் செயல்பட்டது என்பதைத் தரவுகளின் அடிப்படையில் விளக்குகிறது. மேலும், அவருடைய 'புதுமைப் பெண்' கோட்பாட்டிற்கும் ஆதிசக்தி வழிபாட்டிற்கும் இடையிலான தத்துவார்த்தத் தொடர்புகளையும், நிவேதிதா தேவியுடனான சந்திப்பிற்குப் பிறகு உருவான அவருடைய ஆன்மீக மாற்றத்தையும் இக்கட்டுரை விரிவாகப் புலப்படுத்துகிறது.

**திறவுச் சொற்கள்**

மகாகவி பாரதியார், பெண் தெய்வங்கள், பராசக்தி, கடையம், பெண்ணியம், புதுமைப் பெண், பத்திரகாளி, முத்துமாரி, கல்யாணி அம்மன், சாக்தம், சமூக சீர்திருத்தம், பெண் விடுதலை.

---

## 1. முன்னுரை

பார் போற்றும் பாரதியார் தலைசிறந்த பத்திரிகையாளர், கதாசிரியர், எழுத்தாளர், பதிப்பாசிரியர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் எனப் பல பரிமாணங்களைக் கொண்டவர். பாரதியார் பன்மொழிப் புலமை மிக்கவர்; அக்காலத்தில் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிப்பட்ட அரசியல் மற்றும் பொதுச் செய்திகளைத் தமிழ்நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்காகத் தமிழ் மொழியில் மிகத் துல்லியமாக



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

மொழியாக்கம் செய்துள்ளார். தம் மொழி ஆளுமையால் தமிழ் மறுமலர்ச்சிக்கு உரமூட்டியவர் பாரதி. அவர் அனைத்திலும் தெய்வத்தைக் கண்டார்; தெய்வங்களை மட்டுமல்லாது, இயற்கையினையும் தெய்வமாக வணங்கியுள்ளார்.

பாரதியின் படைப்புகளில் சுட்டப்பட்டுள்ள பெருந்தெய்வங்கள் மற்றும் சிறுதெய்வங்கள் பற்றிய பாடல்கள் வெறும் பக்தி இலக்கியமாக மட்டும் அமையாமல், சமூக மாற்றத்திற்கான உந்து சக்தியாகவும் அமைகின்றன. பாரதியார் பெண்ணைப் பாடும்போது பல இடங்களில் அவளைத் தெய்வமாகிய சக்தியாகவே உருவகப்படுத்தியுள்ளார். "காதல்செயு மனைவியே சக்தி, கண்டீர் கடவுணிலை அவளாலே யெய்த வேண்டும்" என்ற வரிகளின் மூலம், குடும்ப உறவின் மேன்மையையும் பெண்ணின் தெய்வீகத் தன்மையையும் அவர் பறைசாற்றினார். இக்கட்டுரை பாரதியின் படைப்புகளில் இடம்பெறும் பெண் தெய்வங்கள் மற்றும் அவர்களின் சமூக முக்கியத்துவத்தை ஆராய்கின்றது.

### 2. மகாகவி பாரதியார்: வரலாற்றுப் பின்னணியும் கடையம் வாழ்வும்

#### 2.1 தொடக்க கால வாழ்வும் இலக்கியப் பயணமும்

ஆங்கிலேயரின் அடிமைத் தளையில் சிக்குண்டுக் கிடந்த தாயகத்தைத் தம் பாட்டுத்திறத்தால் தட்டி எழுப்பியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். இவர் 11/12/1882 இல் எட்டையபுரத்தில் சின்னசாமி அய்யருக்கும், இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். நெல்லை இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், இளம் வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். இவருடைய பதினொன்றாம் வயதிலேயே எட்டையபுர சமஸ்தானப் புலவர்களால் 'பாரதி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பாரதியார் தம் பதினான்காம் வயதில் செல்லம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். தந்தையின் மறைவிற்குப் பிறகு காசிக்குச் சென்ற பாரதி, அங்குச் சமஸ்கிருதம், இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் புலமை பெற்றார். காசியில் இருந்தபோதுதான் அவர் தம் தலைப்பாகையையும் மீசையையும் வைத்துக் கொள்ளத் தொடங்கினார். இவருடைய படைப்புகளில் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்ற முப்பெரும் படைப்புகள் காலத்தால் அழியாதவை.

#### 2.2 சிறைவாழ்வும் விடுதலையும்

1918 ஆம் ஆண்டு, புதுச்சேரியிலிருந்து தமிழ்நாடு வரும்பொழுது பாரதியாரையும் அவரது மனைவி செல்லம்மாள் மற்றும் அப்பாத்துரை ஆகியோரையும் பிரிட்டிஷ் போலீசார் கைது செய்து கடலூர் சிறையில் அடைக்கின்றனர். சிறையில் இருபத்தேழு நாட்கள் பாரதியார் இருந்தார். அவரை விடுதலை செய்ய அன்னிபெசன்ட் அம்மையார், டாக்டர் சர். சி.பி. ராமசாமி ஐயர், திருவாளர் மணி


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)
Tamilmanam

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

அய்யர் போன்றோர் சட்ட ரீதியாகப் போராடினர்.

விடுதலையான பாரதியாரைத் திருநெல்வேலி ரயில் நிலையத்தில் சிநேகிதர்கள் சந்தோஷ ஆரவாரத்தோடு வரவேற்றனர். விடுதலையடைந்த பாரதியார் கடையத்தை அடைந்தார். அங்கிருந்து பாரதியார் திரு ரங்கசாமி ஐயங்காருக்குத் தம் நன்றியைத் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார்.

### 2.3 கடையம் வாழ்வும் ஆன்மீகத் தேடலும்

பாரதியார் 1918 முதல் 1920 வரை கடையத்தில் வாழ்ந்தார். அங்கு அவர் வறுமையிலும், சமூகப் புறக்கணிப்பிலும் வாடினாலும், அவருடைய கவிதை ஊற்று வற்றவில்லை. கடையத்திலிருந்த பத்திர காளியம்மன் கோயில், வாசகிரி முருகன் கோயில், வில்வவனநாதர் கோயில், பெருமாள் கோயில் எனப் பல இடங்களுக்குச் சென்று பாடல்களை இயற்றினார். கடையம் காலத்தில்தான் அவர் சாதிப் பாகுபாடுகளை எதிர்த்துக் கடுமையான போராட்டங்களை முன்னெடுத்தார்.

| **பாரதியார் வாழ்வின் முக்கிய கட்டங்கள்** | **காலம்** | **இடம்** |
|---|---|---|
| பிறப்பு | 11/12/1882 | எட்டையபுரம் |
| 'பாரதி' பட்டம் பெறுதல் | 1893 | எட்டையபுரம் |
| திருமணம் (செல்லம்மாளுடன்) | 1897 | எட்டையபுரம் |
| காசி பயணம் | 1898 - 1902 | வாரணாசி (காசி) |
| புதுச்சேரி தலைமறைவு வாழ்க்கை | 1908 - 1918 | புதுச்சேரி |
| கடையம் வாழ்க்கை | 1918 - 1920 | கடையம் |
| மறைவு | 12/09/1921 | சென்னை |

## 3. கடையம் பத்திரகாளியம்மன் மற்றும் முத்துமாரி பாடல்கள்

பாரதியார் கடையத்தில் வாழ்ந்தபோது பத்திரகாளியம்மன் கோயிலில் அதிக நேரத்தைச் செலவிடுவார். இக்கோயில் இயற்கைச் சூழலில் வடக்கு முகமாக அமைந்துள்ள ஒரு சிறிய மண்டபத்தோடு கூடிய கோயிலாகும்.

### 3.1 பத்திரகாளி தரிசனம்

அம்மன் பத்திரகாளி ஏறத்தாழ ஐந்தடி உயரத்தில் இடது காலை அரக்கன் மீது ஊன்றி, வலது காலைக் குத்திட்டு வீரப்புன்னகையோடு காட்சி தருகிறாள். இக்கோயிலில் பாரதி பாடிய பாடல் வரிகள் பின்வருமாறு:



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

"எங்கோ வாழ்க! நீல மலர்கள் நிரம்பிய அழகியன வான மழகியது வான்வெளி இனிது வானவெளியை மருவிய நின்னொளி இனியவற்றுள் எல்லாம் இனிது … …. …….. இஃதென்னே காக்கா காக்கா எங்கோ வாழ்"

இப்பாடலின் மூலம் இயற்கையின் பேரழகில் இறைவனைக் காண்பதோடு, "நீல மலர்கள்" மற்றும் "வான்வெளி" போன்ற உருவகங்கள் மூலம் சக்தியின் வியாபகத்தை விளக்குகிறார்.

### 3.2 முத்துமாரி பாடல்கள் மற்றும் சமூகச் சாடல்

பாரதி பசியால் வாடிய போது முத்தையா பிள்ளை என்பவர் பத்திரகாளி அம்மனுக்குப் படைத்த பொங்கலைப் பாரதிக்குக் கொடுத்து மகிழ்ந்துள்ளார். பாரதி முத்துமாரியம்மனைப் போற்றிப் பாடிய பாடலில் சமூகத்தின் மனமாசைக் குறித்துப் பாடுகிறார்:

"உலகத்து நாயகியே எங்கள் முத்து மாரியம்மா எங்கள் முத்துமாரி உன்பாதம் சரண் புகந்தோம் - எங்கள் முத்து மாரியம்மா எங்கள் முத்துமாரி தோல் வெளுக்கச் சாம்பருண்டு எங்கள் முத்து மாரியம்மா எங்கள் முத்துமாரி மணி வெளுக்கச் சாணையுண்டு எங்கள் முத்துமாரியம்மா எங்கள் முத்துமாரி மனம் வெளுக்க வழியில்லை எங்கள் முத்து மாரியம்மா எங்கள் முத்துமாரி

இப்பாடல் வரிகளில், மனிதர்கள் புறத்தூய்மைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை அகத்தூய்மைக்குக் கொடுப்பதில்லை என்பதை "மனம் வெளுக்க வழியில்லை" என்ற சொற்கள் மூலம் நையாண்டி செய்கிறார். சாதிய உணர்வுகளாலும், மூடப் பழக்கவழக்கங்களாலும் இருண்டிருக்கும் மனித மனங்களைத் தெளிவுபடுத்த முத்துமாரியின் அருளை நாடுகிறார். ஒருமுறை சாதி வாரியாகப் பிரசாதம் வழங்கப்பட்டபோது இந்தப் பாடலை ஓயாமல் பாடியதற்காகப் பாரதி கோயிலிலிருந்து அடித்துத் தள்ளப்பட்டார் என்ற குறிப்பும் வரலாற்று ரீதியாகக் காணப்படுகிறது.

## 4. கல்யாணி அம்மன் பாடல்கள்: வரலாறும் வழிபாடும்

கடையத்தில் அமைந்த மற்றொரு முக்கிய கோயில் கல்யாணி அம்மன் கோயிலாகும். இக்கோயிலின் வரலாறு குறித்துப் பாரதியார் சுப்பையா நாடார் என்பவரிடம் கேட்டறிந்தார். வெள்ளத்திற்கு அஞ்சி மக்கள் தங்கள் குல தெய்வமான பத்திரகாளியைப் பிடி மண் வாயிலாகக் கீழக் கடையத்திற்குக்கொண்டு வந்து கோயில் கட்டிய கதையை அவர் அறிந்தார்.

### 4.1 கல்யாணியின் கவின் வடிவம்

கல்யாணி அம்மனைப் பாரதி பின்வருமாறு போற்றிப் பாடுகிறார்:

"உஜ்ஜயினி நித்திய கல்யாணி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி உஜ்ஜய காரண சங்கரதேவி உமா சரஸ்வதி ஸ்ரீ மாதாஸா வாழி புனைந்து மகேஸ்வரதேவன் தோழி பதங்கள் பணிந்து துணிந்தனம்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

இப்பாடலில் அம்மனை "உமா", "சரஸ்வதி", "ஸ்ரீ மாதா" எனப் பல பெயர்களில் அழைத்து, அனைத்துப் பெண் தெய்வங்களின் ஒருமித்த வடிவாக அவளைக் காண்கிறார். இது பாரதியின் தத்துவப் பார்வையில் "சக்தி" என்பது ஒன்றே என்பதையும், அதன் வெளிப்பாடுகள் பல என்பதையும் காட்டுகிறது.

**5. பாரதியாரின் சாக்தத் தத்துவமும் பராசக்தி வழிபாடும்**

பாரதியார் சாக்த மதத்தில் (சக்தி வழிபாடு) மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர் தம்மைப் 'பராசக்தியின் தாசன்' (சக்திதாசன்) என்றே அடையாளப்படுத்திக் கொண்டார். அவருடைய ஆன்மீகப் பார்வை அத்வைதச் சிந்தனைகளோடும், மனிதாபிமானத்தோடும் கலந்தது.

**5.1 சக்தியே அனைத்திற்கும் ஆதாரம்**

உலகில் உள்ள அனைத்து இயக்கங்களுக்கும் சக்தியே காரணம் என்பதைப் பாரதி உணர்ந்திருந்தார். அவருடைய சக்தி பாடல்கள் சமூகத்தின் வறுமையைப் போக்கவும், புரட்சிகளை உண்டாக்கவும் வல்லவை என நம்பினார்.

"எங்கெங்கு காணினும் சக்தியடா - தம்பி

ஏழுகடல் அவள் வண்ணமடா"

என்ற வரிகள் பாரதியின் உலகளாவிய சக்தி தரிசனத்தை வெளிப்படுத்துகின்றன.

**5.2 பெண் தெய்வங்களின் செயல்பாடுகள்**

பாரதியாரின் பாடல்களில் பெண் தெய்வங்கள் அவர்களின் செயல்பாடுகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளனர்:

- **கலைமகள் (சரஸ்வதி):** ஞானத்தை வழங்கும் தெய்வம்.
- **திருமகள் (லட்சுமி):** செல்வத்தை வழங்கும் தெய்வம்.
- **மலைமகள்/பராசக்தி:** வீரத்தையும் விடுதலையையும் வழங்கும் தெய்வம்.

இந்த மூன்று நிலைகளும் ஒரு பெண்ணிடம் ஒருங்கே அமைந்திருப்பதாகப் பாரதி கருதினார்.

| தெய்வம் | உருவகம் | சமூக முக்கியத்துவம் |
|---|---|---|
| சரஸ்வதி (கலைமகள்) | ஞானத்தின் ஒளி | பெண்கல்வி மற்றும் அறிவு வளர்ச்சி |
| லட்சுமி (திருமகள்) | செல்வத்தின் செழிப்பு | வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார சுதந்திரம் |
| காளி / பராசக்தி | வீரத்தின் | அடிமைத்தனம் மற்றும் அநீதிக்கு எதிரான |



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

| தெய்வம் | உருவகம் | சமூக முக்கியத்துவம் |
|---|---|---|
| | வெளிப்பாடு | போராட்டம் |

### 6. பெண்ணியச் சிந்தனைகளும் 'புதுமைப் பெண்' கோட்பாடும்

பாரதியார் வாழ்ந்த காலத்தில் பெண்கள் கல்வி மறுக்கப்பட்டு, அடுப்படியிலேயே முடங்கிக் கிடந்தனர். அவர்களுக்கு எதிராக நிலவிய சதி (உடன்கட்டை ஏறுதல்), குழந்தை திருமணம் போன்ற கொடுமைகளைக் கண்டு பாரதி கொதித்தெழுந்தார்.

### 6.1 புதுமைப் பெண்ணின் இலக்கணம்

பாரதி கண்ட புதுமைப் பெண் வெறும் கற்பனையல்ல; அவள் அறிவும் ஆற்றலும் கொண்டவள். அவளுடைய பண்புகளை அவர் பின்வருமாறு விவரிக்கிறார்:

- **நிமிர்ந்த நன்னடை:** அடிமைத்தனம் அற்ற நடையுடை.
- **நேர்கொண்ட பார்வை:** அச்சமற்ற பார்வை.
- **அறிவுத் தெளிவு:** கல்வியினால் பெற்ற ஞானம்.

"நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டும்" என்று பாடிய பாரதி, பெண்கள் சமூகத்தில் ஆண்களுக்கு நிகராகச் சட்டங்கள் இயற்ற வேண்டும் என்று விரும்பினார்.

### 6.2 பெண்கல்வி மற்றும் சமூக மாற்றம்

பெண்களுக்குக் கல்வி அளிப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்பதைப் பாரதி வலியுறுத்தினார். "பெண்ணறிவை மதியாத தீமை யெல்லாம் மண்ணுறக் குளித்துவிடல் வேண்டும்" என்று அவர் எச்சரித்தார். பெண்கள் வீட்டைத் தாண்டி உலக விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்றும், அவர்கள் "காட்டில் பறக்கும் பறவைகளைப் போல" சுதந்திரமாக வாழ வேண்டும் என்றும் கனவு கண்டார்.

### 7. பாஞ்சாலி சபதம்: ஒரு பெண்ணியப் போராட்டத்தின் குறியீடு

பாரதியார் படைத்த 'பாஞ்சாலி சபதம்' ஒரு சாதாரண இதிகாசத் தழுவல் மட்டுமல்ல; அது ஒரு பெண்ணியக் காப்பியம். இதில் பாஞ்சாலியை அவர் 'பாரத மாதா'வின் குறியீடாக மாற்றினார்.

சபையில் துகிலுரியப்படும் திரௌபதி, அந்நியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்தியத் தாயின் நிலையைக் காட்டுகிறாள். அவள் கூந்தலை முடிக்கமாட்டேன் என்று எடுக்கும் சபதம், நாட்டின் விடுதலை முழக்கமாக ஒலிக்கிறது. பெண்ணின் மானத்தைக் காக்காத நாடு அழிந்துவிடும் என்ற எச்சரிக்கையையும் பாரதி இதில் வைக்கிறார்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**8. பாரதியார்: ஒரு சமூகச் சீர்திருத்தவாதி**

பாரதியார் கடையத்தில் வாழ்ந்தபோது பல சாதி எதிர்ப்புக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தினார். கடையம் தாலமலை அய்யன் (சாஸ்தா) கோயில் திருவிழாவில் அனைத்துச் சாதியினருடனும் அமர்ந்து உணவு உண்டார். இதனால் ஆத்திரமடைந்த பழமைவாதிகள் அவர் வீட்டிற்கு முன் சாணத்தையும் கழிவுகளையும் வீசி எறிந்தனர். இருப்பினும் பாரதி அஞ்சவில்லை. "சாதி இரண்டொழிய வேறில்லை" என்ற ஔவையின் வாக்கைத் தாரக மந்திரமாகக் கொண்டார்.

அவருடைய 'முத்துமாரி' பாடல், மனிதர்களிடையே இருக்கும் பாகுபாடுகளைக் களைந்து, அனைவரும் சமம் என்ற உண்மையை உரக்கச் சொன்னது. வறுமையிலும் கூடத் தம்மிடம் இருந்த சொற்பப் பொருட்களைப் பிறருக்குக் கொடுத்து மகிழ்ந்த மகாத்மா அவர்.

**9. பாரதி மற்றும் ஷெல்லியின் ஒப்பீடு**

பாரதியார் ஆங்கிலக் கவிஞர் ஷெல்லியின் கவிதைகளால் பெரிதும் கவரப்பட்டவர். அவர் தம்மை 'ஷெல்லிதாசன்' என்று அழைத்துக் கொண்டார். ஷெல்லியின் சுதந்திர வேட்கையும், புரட்சிகரமான சிந்தனைகளும் பாரதியின் கவிதைகளில் எதிரொலித்தன. "காதல் இல்லையெனில் வாழ்க்கை இல்லை" என்ற ஷெல்லியின் கருத்தைப் பாரதி மந்திரமாகப் போற்றினார். பாரதியின் காதல் பாடல்களில் ஒரு பெண்ணைத் தெய்வமாகப் பார்க்கும் உயர்நோக்கம் ஷெல்லியின் தாக்கத்தைக் காட்டுகிறது.

**10. முடிவுரை**

மகாகவி பாரதியாரின் கவிதைகளில் பெண் தெய்வங்கள் வெறும் வழிபாட்டு உருவங்கள் மட்டுமல்ல; அவை சமூக மாற்றத்தின் ஆயுதங்கள். கடையத்தின் இயற்கைச் சூழலில் அவர் பாடிய பத்திரகாளி, முத்துமாரி மற்றும் கல்யாணி அம்மன் பாடல்கள் இன்றும் நம் சமூகத்தின் மனமாற்றத்திற்குத் தேவையாக இருக்கின்றன. பாரதி பெண்ணைத் தெய்வமாகப் போற்றியது அவளை அடிமைப்படுத்த அல்ல, மாறாக அவளுடைய மறைந்துள்ள 'சக்தி'யை வெளிக்கொணரவே ஆகும்.

அவருடைய 'புதுமைப் பெண்' கனவு இன்றும் நவீன இந்தியாவின் பெண்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது. தெய்வங்களை வணங்குவதோடு மட்டுமல்லாமல், அநீதிகளுக்கு எதிராகச் சீற வேண்டும் என்பதைப் பெண் தெய்வங்களின் வீரக் கோலங்கள் மூலம் பாரதி உணர்த்தினார். பாரதியின் வாழ்வும் கவிதைகளும் ஒரு உண்மையை உரக்கச் சொல்கின்றன: "எங்குப் பெண்கள் மதிக்கப்படுகிறார்களோ, அங்குச் சமூகம் சிறக்கும்".


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

### அடிக்குறிப்புகள்

1. கடையத்தில் உதிர்ந்த பாரதியின் படையல்கள், ப,8.
2. கடையத்தில் உதிர்ந்த பாரதியின் படையல்கள், ப,8.
3. கடையத்தில் உதிர்ந்த பாரதியின் படையல்கள், ப, 20.
4. கடையத்தில் உதிர்ந்த பாரதியின் படையல்கள், ப, 17.
5. கடையத்தில் உதிர்ந்த பாரதியின் படையல்கள், ப, 13-14
6. கடையத்தில் உதிர்ந்த பாரதியின் படையல்கள், ப, 15

---

### 11. மேற்சான்று நூற்பட்டியல் (Works Cited)

[1].கணபதிராமன், ச. *கடையத்தில் உதிர்ந்த பாரதியின் படையல்கள்.* ஆழ்வார்குறிச்சி: திருவள்ளுவர் கழகம், தமிழ்நாடு. அச்சிடப்பட்டது.

[2].பரமேஸ்வரன், கே. "சாக்த சமயச் சிந்தனைகள் பாரதியின் படைப்புகளில்". *International Research Journal of Tamil*, தொகுப்பு 4, இதழ் S-11, செப்டம்பர் 9, 2022, பக். 17-25. doi:10.34256/irjt224s113.

[3].பரிமளம், வி. "பாரதி கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்". *International Research Journal of Tamil*, தொகுப்பு 4, இதழ் S-11, செப்டம்பர் 10, 2022, பக். 190-194. doi:10.34256/irjt224s1127.

[4].பாரதியார், சுப்பிரமணிய. *பாரதியார் கவிதைகள்.* தொகுப்பு: சி. ஸ்ரீநிவாசன், சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம், 2012. அச்சிடப்பட்டது.

[5].ராமச்சந்திரன், பார்வதி. "துர்கா, காளி, சரஸ்வதி, லட்சுமி மற்றும் பார்வதி: ஒரு பெண்ணியப் பார்வை". *Different Truths*, செப்டம்பர் 28, 2022, differenttruths.com/durga-kali-saraswathi-lakshmi-and-parvathi/.

[6]."மகாகவி சுப்பிரமணிய பாரதி: ஒரு சுருக்கமான வரலாறு". *Wikipedia, The Free Encyclopedia*, 2023, en.wikipedia.org/wiki/Subramania_Bharati.

[7].சுப்பராமன், என்.வி. "மகாகவி பாரதி நினைவு நாள் மற்றும் கவிதைகள்". *NVSR Blog*, செப்டம்பர் 11, 2020, nvsr.wordpress.com/category/mahakavi-bharathi/.

[8]."பாரதியின் கடையம் வாழ்வும் ஆன்மீகப் பயணமும்". *சொல்வனம்*, ஆகஸ்ட் 22, 2020, solvanam.com/2020/08/22/பாரதியின்-கடைய-வாழ்வு/.

[9].முத்துலட்சுமி, ஜி. "பாரதியின் தத்துவச் சிந்தனைகள்". *International Research Journal of Tamil*, தொகுப்பு 4, இதழ் S-11, 2022, பக். 128-132.

[10]. பூமாரி, கே. மற்றும் இலக்குவன், ஆர். "பாரதியார் கவிதைகளில் சமய நல்லிணக்கச் சிந்தனைகள்". *International Research Journal of Tamil*, தொகுப்பு 4, இதழ் S-11, 2022, பக். 26-33.

*Copyright © 2026 Tamilmanam International Research Journal of Tamil Studies, All rights reserved.*